அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 14/95

எனது இல. 1/543 ஈ/02டி/02/94(1)
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
1995 ஏப்ரல் மாதம் 28 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

## தொழில்நுட்பவியலாளர் தரங்களின் சம்பளங்கள்

தொழில் நுட்பவியலாளர் தரங்களைச் சேர்ந்த தொழிலாளர் தரத்தின், தொழில் நுட்பவியலாளர் தரம் (தெரிவுத் தரம்) வகுப்பு 1 தரம் 1 மற்றும் வகுப்பு 1 தரம் 11 இன் சம்பளங்களைத் திருத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

02. புதிய சம்பள அளவுத் திட்டங்கள் பின்வருமாறு:

தொழிலாளர் தரம்

| | |
|---|---|
| தொழில்நுட்பவியலாளர் தரம் (தெரிவுத்தரம்) – வகுப்பு 1 தரம் 1 | ரூபா. 35640-6 × 780 -9 × 1200-51120 |
| வகுப்பு 1 தரம் 11 | ரூபா. 29400-5 × 660 -11 × 780-41280 |

03. இத்தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களின் ஆண்டேற்றத் திகதிகளில் மாற்றங்க எதுவும் ஏற்படாததுடன், தற்போது உள்ள வினைத்திறன் காண் தடைகள் நேரொத்த சம்பளப் படி நிலைகளில் செயற்படும்.

04. புதிய சம்பளங்களுக்கு இப்போதுள்ள சம்பளங்களை மாற்றியமைத்தல் படி முறை அடிப்படையில் அமைதல் வேண்டும்.

05. இச்சுற்றறிக்கை மூலம் செயற்படுத்தப்படுகின்ற புதிய சம்பள அளவுத் திட்ட களை கருதாமல் இணைந்த படிகள், புகையிரத அனுமதிச் சீட்டுகளுக்கான உரித்துக்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் 37/92 ஆம் இலக்க 92.12.24 ஆந் தேதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் "1993 புதிய சம்பளங்களுக்கு" அமைவாக இருக்கும். விதவைகள், அநாதைகள்/தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு செலுத்த வேண்டிய உதவு தொகையின் அளவு 37/92 ஆம் இலக்க 92.12.24 ஆந் தேதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்புடைய உத்தியோகத்தர்களின் "1993 புதிய சம்பளங்களின்படி மாற்றங்கள் எதுவும் ஏற்படாமல் இருக்கும். எனினும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் புதிய சம்பளத்திற்கேற்ப உதவு தொகை அறவிடப்படும்.

06. இச்சுற்றறிக்கை 1995.01.01 ஆந் திகதி தொடக்கம் செயற்பாட்டிலிருக்கும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.